## 2. ஓர் எழுத்துருவைக் கட்டமைக்கவும் மேம்படுத்தவும் ஒரு திட்டத்துடன் செயற்படுதல்

4 - 9 ஆந் தரம்

20 மணித்துளிகள்

அ) ஆசிரியர் முதலில் எல்லா எழுத்துருக்களும் மூன்று பகுதிகளாக கட்டமைக்கப்படுகின்றன என்பதை விளக்குவார்: முன்னுரை / கண்ணோட்டம் தலையாய உடல் (உண்மையான பொருள்) – முடிவு/திரட்டு / கண்ணோட்டம். இது மாணவர்களுக்கு ஒன்று அல்லது பல எழுத்துரு எடுத்துக்காட்டுகளுடன், முடியுமாயின் (செய்தித்தாள் கட்டுரை, சிறு இலக்கிய எழுத்துருக்கள், மாணவர்களது பின்பற்றத்தக்க வேறு எழுத்து) விளக்கப்படவேண்டும்.

ஆ) ஆசிரியர் பலகையில் கட்டமைப்பினை எழுதுகிறார் (அல்லது ஒளிப்படக்காட்டியூடாகக் காட்டல்) (எடுத்துக்காட்டினைப் பார்க்கவும்) முழு வகுப்புடன் ஒரு கருப்பொருள் அதன் திட்டமிடல் நிலையுடன் பயிற்சி செய்யப்படுகின்றது. தேர்ந்தெடுக்கக்கூடிய பொருத்தமான தலைப்புகள்: எனது பெற்றோரின் தோன்றிடம், ...க்கான பயணம் பற்றிய அறிக்கை, "இரு பண்பாடுகள் மற்றும் மொழிகளினிடையே வாழ்வு" பற்றிய என் எண்ணங்கள்.

இ) மாணவர்கள் தாளும் ஒரு தலைப்பும் (பார்க்கவும் மேலே) பெறுகின்றனர் அல்லது தங்களுக்கான தலைப்பினைத் தெரிவுசெய்கின்றனர். அவர்கள் தாளை மூன்று பரப்புகளுக்காகப் பிரிக்கின்றனர்: அறிமுகம் – பெரும்பகுதி – நிறைவு. பின்னர் அவர்கள் பொருத்தமான பரப்புகளுள் சிறப்புச் சொற்களை எழுதுவர். மாணவர்கள் முதலில் #8 இல் படித்த (கொத்து, மன வரைபடம், இடுநிலைப்பாய்) செயல்படு முறைகளுள் ஒன்றினைப் பயன்படுத்துதல் ஏற்றதாயிருக்கும், அது எண்ணக்கருக்களை உருவாக்க அவர்களுக்கு துணைசெய்யும்.

ஈ) தங்களுடைய எழுத்துருவினை கட்டமைக்கவும் திட்டமிடவும் திட்டத்தினைப் பயன்படுத்தியதில் ஏற்பட்ட பட்டறிவுகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடல். எப்படி அது தொடரும்? முடியுமேயானால், அடுத்து எழுத்து வேலையை நிறைவுசெய்யலாம்.







II